| S–4827 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA1C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ**  $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கண்ணதாசன் படைப்புகள் இரண்டினைக் கூறுக.

2. 'புரட்சி கவி' எனும் காப்பியத்தை பாவேந்தர் எப்போது வெளியிட்டார்?

3. மு. மேத்தா பிறந்த நாள் எது?

4. நா. காமராசன் நடத்திய இதழின் பெயர் என்ன?

5. 'சுயேச்சை சுந்தரலிங்கம்' எனும் கதையின் கரு கூறுக.

6. 'பணமும் குலமும்' என்ற கதையின் மாந்தர்களை பட்டியலிடுக.

7. பொன்னீலன் எந்த நூலுக்காக சாகித்திய அகதெமி விருதினைப் பெற்றார்?

8. பொன்னீலன் படைப்புகள் நான்கினைக் கூறுக.

9. பத்துப் பாட்டில் ஆற்றுப் படை நூல்களைக் குறிப்பிடுக.

10. நற்றிணை கூறும் அளவைக் கருவிகள் யாவை?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குயிலின் காதல் கதை குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆட்டனத்தி ஆதிமந்தியில் வெளிப்படும் கவிதை நயங்களை எடுத்துரைக்கவும்.

12. (அ) 'வெற்றியின் மறுபக்கம்' என்ற கவிதையின் கருத்தை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) 'பிரமச்சாரியின் மகன்' கவிதை வெளிப்படுத்தும் கருத்தை ஆய்க.

13. (அ) அன்னம்மாளின் பாத்திரப் படைப்பினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) 'கிணறு' எனும் கதையின் கருத்து குன்றாமல் சுவைபட எடுத்துரைக்கவும்.

14. (அ) மிக்கல், தாசன் ஆகியோரின் பாத்திர பண்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) தேடல் நாவலில் காணும் வட்டார வழக்கு சொல் குறித்து ஆய்க.

15. (அ) இரட்டைக் காப்பியங்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சைவ சமய குரவர்கள் பற்றி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடை தருக.

16. 'புரட்சி கவி' எனும் காப்பியத்தின் வழி அறியலாகும் தமிழின் பெருமைகளை எடுத்துரைக்கவும்.

17. மு. மேத்தாவின் கவிதைகளில் வெளிப்படும் அழகியல் சிந்தனைகளை ஆராய்க.

18. சுயேச்சை சுந்தரம் எனும் கதை விளக்கும் சமூக தன்மையை வெளிப்படுத்துக.

19. மானுட சமூக மாற்றத்திற்கான சிந்தனையை தேடல் நாவல் வழி புலப்படுத்துக.

20. அற இலக்கியங்களில் காணும் விழுமியங்களை தொகுத்துரைக்கவும்.

S–4828

Sub. Code
22BTA1C2

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**இலக்கணம் – நன்னூல் – எழுத்து**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளிக்க.

1. நூலின் வகைகளைக் குறிப்பிடுக.

2. சூத்திரத்தின் இலக்கணம் கூறுக.

3. எழுத்து என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

4. இதழைக் குவித்துப் பிறக்கும் எழுத்துகளை எழுதுக.

5. பதம் - விளக்குக.

6. தற்பவம் என்றால் என்ன?

7. தொகைநிலைத் தொடர்களைக் குறிப்பிடுக.

8. மென்தொடர் குற்றியலுகரப் புணர்ச்சிக்கு சான்று தருக.

9. சுட்டுப் பெயர்முன் ஆய்தம் கெடும் - சான்று தருக.

10. ஓரெழுத்து ஒருமொழி புணர்ச்சிக்கு இரு சான்று தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாணாக்கலின் இலக்கணம் கூறி அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உரையின் பொது இலக்கணம் கூறி விளக்குக.

12. (அ) அளபெடை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளை விவரிக்க.

13. (அ) போலி என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஓரெழுத்து ஒருமொழி குறித்து எழுதுக.

14. (அ) செய்யுள் விகாரங்கள் யாவை? சான்று தருக.

(அல்லது)

(ஆ) நாழி, உரி, புளி என்னும் சொற்களின் புணர்ச்சி குறித்து எழுதுக.

15. (அ) யகர, ரகரப் புணர்ச்சி மாற்றங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நான்கு வகைப் புணர்ச்சிக்குரிய புறனடையை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிறப்புப் பாயிரக் கருத்துகளை விவரிக்க.

17. சார்பெழுத்துகளின் வகைகளைக் கூறி விளக்குக.

18. பதவியல் கூறும் செய்திகளை தொகுத்துரைக்க.

19. குற்றியலுகர எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி குறித்து விவரிக்க.

20. காலம் காட்டும் விகுதிகளை சான்றுடன் விளக்குக.

| S–4829 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTAA1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

தமிழ்

இயைபுப்பாடம் - இதழியல்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடை தருக.

1. முதன்முதலில் அச்சுப்பொறி யாரால் எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?

2. அரசு விளம்பரங்கள் பற்றி எழுதுக.

3. கேலிச் சித்திரம் என்றால் என்ன?

4. ‘தனிச் செய்திகள்’ - விளக்கம் தருக.

5. மகாத்மா காந்தியடிகள் தலையங்கம் எழுதிய இதழ்களைக் குறிப்பிடுக.

6. NEWS – என்பதன் விரிவாக்கம்.

7. திறனாய்வாளன் இயல்புகளைக் கூறுக.

8. ‘யூ.என்.ஐ.’ - விளக்கம் தருக.

9. பொழுது போக்கு இதழ்கள் இரண்டினைக் கூறுக.

10. இணைய இதழ்கள் இரண்டினைக் கூறுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இதழ்களின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்களிப்பினைக் கூறுக.

12. (அ) இதழ்களால் சமூகம் வளர்ச்சி பெற்றதை விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களின் பொதுப் பணிகளைச் சுட்டுக.

13. (அ) 'தலையங்கம்' விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இதழ்கள் ஒழுங்குமுறை சட்டம் குறித்து எழுதுக.

14. (அ) செய்தியாளரின் பண்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) துணையாசிரியரின் பணிகள் யாவை?

15. (அ) விளம்பரங்கள் இதழில் பெறுமிடத்தை கூறுக.

(அல்லது)

(ஆ) செய்தி செப்பனிடும் பணியினைக் கூறுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடை தருக.

16. இதழ்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்து கட்டுரைக்க.

17. பக்க வடிவமைப்பு குறித்து விவரி.

18. இந்திய செய்தி நிறுவனங்களை ஆய்க.

19. இதழ்களின் வகைகளைச் சான்றுடன் கட்டுரைக்க.

20. விளம்பரம் பற்றி விரிவாக எடுத்துரைக்க.

————————

| S–4830 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA2C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**பக்தி இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. நாவுக்கரசரின் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

2. சுந்தரரின் பெற்றோர் பெயர் என்ன?

3. காரைக்கால் அம்மையின் இயற்பெயர் என்ன?

4. தென்னவன் பிரம்மராயர் பட்டம் பெற்றவர் யார்?

5. திருமங்கை ஆழ்வாரின் இயற்பெயர் என்ன?

6. பூமகள் அம்சமாகப் பிறந்தவர் யார்?

7. எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளையின் காலக்கட்டத்தைக் குறிப்பிடுக.

8. கிறித்துவர்களின் தேவாரம் எது?

9. இசுலாமியத் தாயுமானவர் எனப் போற்றப்படுபவர் யார்?

10. கண்ணி - குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திரிக்கழுமலப் பதிகச் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சுந்தரர் குறிப்பு வரைக.

12. (அ) காரைக்கால் அம்மையின் பக்தி சிறப்பினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திருவாசகப் பெருமைகளை எடுத்துரைக்க.

13. (அ) நாராயணன் பெருமைகளை ஆண்டாள் பாடல்வழி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திருமங்கையாழ்வாரின் இறைபக்தியை எடுத்துரைக்க.

14. (அ) இரட்சணிய மனோகரம் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) திருநாமப் பதிகச் சிறப்புகளை குறிப்பிடுக.

15. (அ) பராபரக் கண்ணி - விளக்குக.

(அல்லது)

(ஆ) குணங்குடியார் இறைவனை போற்றும் தன்மை குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருவாரூர் பதிகச் சிறப்பினை நாவுக்கரசர் பாடல் வழி விளக்குக.

17. திருப்பொன்னூசல் பாடல் வாயிலாக அறியலாகும் செய்திகள் குறித்து கட்டுரை வரைக.

18. திருமங்கையாழ்வாரின் பக்தி உணர்வை திருக்குறுந்தாண்டகம் வழி எடுத்துரைக்க.

19. இரட்சணிய மனோகரத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.

20. பராபரக் கண்ணி வாயிலாக அறியலாகும் செய்திகள் குறித்து கட்டுரை வரைக.

———————

| S–4831 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA2C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கணம் - நன்னூல் - சொல்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்தும்** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடைளிக்க.

1. மூவிடங்கள் யாவை? அவற்றிற்குரிய பொதுப்பெயர்கள் யாவை?

2. வேற்றுமை உருபுகளை ஏற்காத பெயர்களைக் குறிப்பிடுக.

3. ஆகுபெயர் - விளக்கம் தருக.

4. விளியேற்காத பெயர்களைக் குறிப்பிடுக.

5. குறிப்பு வினையை விளக்கி சான்று தருக.

6. உயர்திணை, அஃறிணைகளுக்குரிய வினைச் சொற்கள் யாவை?

7. வேற்றுமைத் தொகை என்றால் என்ன?

8. பண்புத்தொகையின் இலக்கணத்தை சான்றுடன் தருக.

9. ‘மற்று’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

10. மூவறிவு உயிர்கள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்தும்** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மூவகை மொழிகள் யாவை? தக்க சான்று தருக.

(அல்லது)

(ஆ) சொற்கள் பொருளுணர்த்தும் முறையை சான்றுடன் விளக்குக.

12. (அ) ஆறாம் வேற்றுமையின் இலக்கணம் கூறிச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை மயக்கத்தைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) உயர்திணை, அஃறிணைகளுக்குரிய வினைமுற்றுகளுக்குச் சான்று தருக.

(அல்லது)

(ஆ) பெயரெச்சத்தின் இலக்கணத்தைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) தொகாநிலைத் தொடர்களைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) எண்வகை விடைகளைத் தக்க எடுத்துக்காட்டுடன் விளக்குக.

15. (அ) ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) மூவறிவு உயிர்கள் யாவை? சான்று தருக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. நால்வகைச் சொற்கள் பற்றி விவரித்து எழுதுக.

17. வேற்றுமை உருபுகளை எடுத்துரைத்து சான்றுடன் விளக்குக.

18. வினையியல் கூறும் எச்சங்கள் பற்றித் தொகுத்தெழுதுக.

19. அறுவகை தொகைகளை விவரித்தெழுதுக.

20. ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல், பல குணம் தழுவிய ஒரு உரிச்சொற்களைத் தக்க சான்றுகளுடன் விளக்குக.

———————

| S–4832 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTAA2 |

## B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### தமிழ்

### இயைபுப்பாடம் - படைப்புக்கலை

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                                        $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. மரபுக்கவிதை என்றால் என்ன?

2. புதுக்கவிதையின் நோக்கத்தைக் குறிப்பிடுக.

3. சிறுகதை - விளக்கம் தருக.

4. சிறுகதையின் உத்திகள் நான்கினைக் கூறுக.

5. நாடகம் - சொல் விளக்கம் தருக.

6. மறுமலர்ச்சி நாடகங்கள் இரண்டினை எழுதுக.

7. புகழ்பெற்ற உரைநடை ஆசிரியர்களுள் இருவர் பெயரினைச் சுட்டுக.

8. கட்டுரை இலக்கியத்தின் நோக்கம் யாது?

9. கேலிச் சித்திரம் என்றால் என்ன?

10. உரையாடல்களின் முக்கியத்துவத்தை எழுதுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) 'சுவடுகள்' என்னும் தலைப்பில் மரபுக்கவிதைப் படைத்திடுக.

(அல்லது)

(ஆ) கவிதையில் அமையும் படிமங்களைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) சிறுகதையில் 'கரு' உருவாக்க முறையைக் கூறுக.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் வகைப்பாடுகளை பட்டியலிடுக.

13. (அ) நாடகத்தில் அமையும் பாத்திர வகைப்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாடகம் எவ்வாறு எழுத வேண்டும்? விளக்குக.

14. (அ) பொதுக்கட்டுரை எழுதுவதற்குரிய ஆயத்தங்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பயணக் கட்டுரை என்றால் என்ன?

15. (அ) உமக்குத் தெரிந்த நகைச்சுவைத் துணுக்குகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) உரையாடல்களால் விளையும் பயன்கள் யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. 'வாழும் தமிழ்' என்னும் தலைப்பில் இருபது வரிகளுக்கு மிகாமல் புதுக்கவிதைப் படைத்திடுக.

17. 'செய்நன்றி' என்னும் கருவினைக் கொண்டு சிறுகதை ஒன்று எழுதுக.

18. தற்காலச் சூழலைக் கருத்தில் கொண்டு 'அன்றும் இன்றும்' என்னும் தலைப்பில் நாடகம் எழுதிடுக.

19. மூடநம்பிக்கைக்கு எதிரான அறிவியல் கட்டுரை ஒன்றைப் படைத்திடுக.

20. உமது கல்லூரி குறித்து வருணனைக் கட்டுரை வரைந்திடுக.

———————

**S–4833**

| Sub. Code |
|---|
| 22BTA3C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. பிள்ளைத்தமிழின் வகைகளைக் குறிப்பிடுக.

2. பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்களைக் குறிப்பிடுக.

3. தூதுக்குரிய அஃறிணைப் பொருட்களைச் சுட்டுக.

4. அழகர் கோடைத் திருவிழாவிற்காக எங்கு எழுந்து அருளுகின்றார்?

5. 'ஒரு குலத்தில் பெண்கள் கொடோம் ஒரு குலத்தில் கொள்ளோம் உறவு பிடித்தாலும் விடோம்' கூறியவர் யார்?

6. திருக்குற்றாலக் குறவஞ்சி - நூற் குறிப்புத் தருக.

7. சமயக் குரவர்கள் நால்வரைக் குறிப்பிடுக.

8. நால்வர் நான்மணிமாலை - பெயர்க்காரணம் தருக.

9. கழுகுமலை முருகன் கோவில் அமைப்பினை எழுதுக.

10. திருப்புகழ் முழக்கம் எங்கு சென்றடைவதாகக் காவடிச் சிந்து கூறுகிறது?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் காப்பு பருவத்தின் வாயிலாகப் புலப்படும் கடவுளர்களின் சிறப்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பிள்ளைத்தமிழின் பத்துப் பருவங்களை விளக்குக.

12. (அ) கிளியின் பெயர்ச் சிறப்புகளை கிள்ளை விடு தூதின் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அழகர் கிள்ளை விடு தூதில் தலைவி அழகர் மேல் கொண்ட காதலைப் புலப்படுத்துக.

13. (அ) குறவஞ்சி நடந்து வரும் பாங்கினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குற்றாலக் குறவஞ்சியில் குறவஞ்சி கூறிய கிளை விசேடத்தினைக் கூறுக.

14. (அ) காவடிச்சிந்துவில் இடம்பெறும் கழுகுமலை வளத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) அண்ணாமலையார் - குறிப்பு வரைக.

15. (அ) அப்பரின் சிறப்புகளாக சிவப்பிரகாசர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) நால்வர் நான்மணிமாலை - நூற் குறிப்புத் தருக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழின் பருவங்களில் சுட்டிக்காட்டப்படும் முருகனின் சிறப்புகளை விவரி.

17. அழகர் கிள்ளை விடு தூதில் பத்து அங்கங்களின் (தசாங்கம்) கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

18. திருக்குற்றாலக் குறவஞ்சியில் சிங்கன் சிங்கிக்கு இடையே நடைபெறும் நாடகச் சிறப்பினை ஆய்க.

19. நால்வர் நான்மணிமாலை எடுத்துரைக்கும் சமயக் குரவர்களின் பக்திச் சிறப்பினை ஆராய்க.

20. காவடிச்சிந்து ஒரு வழிநடைப்பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் காவடிச்சிந்து நூல் வழி மதிப்பீடு செய்க.

———————

| S–4834 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA3C2 |

## B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### Third Semester

### தமிழ்

### நம்பியகப்பொருள்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                                        $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. கைக்கிளை என்பது என்ன?

2. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?

3. இயற்கை புணர்ச்சி என்பது என்ன?

4. மடற்கூற்று என்பதன் விளக்கம் தருக.

5. வரைவு எனப்படுவது யாது?

6. மனைமருட்சி - வரையறுக்க.

7. இல்வாழ்க்கை என்பதனை விளக்குக.

8. வெள்ளணி என்றால் என்ன?

9. பாட்டுடைத் தலைவன் இலக்கணம் கூறுக.

10. உள்ளுறை உவமம் என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) ஊடல் தணிக்கும் வாயில்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) முதற்பொருள் வகைப்பாடு குறித்து எழுதுக.

12. (அ) களவிற்குரிய கிளவித்தொகைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பகற்குறியில் நிகழும் நிகழ்வுகள் குறித்து எழுதுக.

13. (அ) மூவகை புணர்ச்சிகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளை எடுத்துரைக்க.

14. (அ) பிரிவுகள் குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளை எடுத்துரைக்க.

15. (அ) அகப்புறக் கைக்கிளை குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) இருவகை உவமவகைகள் குறித்துக் கட்டுரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. பிரிவின் வகைகுறித்துக் கட்டுரைக்க.

17. பாங்கியற் கூட்டத்தின் விரியை விளக்குக.

18. உடன்போக்கின் வகையும் அதன் விரியும் குறித்துக் கட்டுரைக்க.

19. ஊடல் வகைகள் குறித்து விளக்கி வரைக.

20. அகப்பாட்டினுள் வரும் பொருள்கள் குறித்து விவரிக்க.

---

| S–4835 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTAA3 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

தமிழ்

இயைபுப்பாடம் – இலக்கண வரலாறு

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. தொல்காப்பியத்தின் முதல் நூல் எது?

2. புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூலின் ஆசிரியர் யார்?

3. குட்டி தொல்காபியம் என அழைக்கப்படும் நூல் எது?

4. சிதம்பரபாட்டியல் என்ற நூல் எத்தனை இயல்களை கொண்டது?

5. நவநீதபாட்டியல் என்ற நூலின் ஆசிரியர் யார்?

6. தண்டியலங்காரத்தில் உள்ள மொத்த அணிகள் எத்தனை?

7. நிகண்டு மொத்தம் எத்தனை தொகுதிகளை கொண்டது?

8. 'அகராதி' என்ற சொல்லை முதன் முதலாக பயன்படுத்தியவர் யார்?

9. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்" என்று கூறும் நூல் எது?

10. எழுத்து, சொல் பற்றி கூறும் நூல்களைக் குறிப்புடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இலக்கண வகைகளை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கணத்தினால் ஏற்படும் நன்மைகள் பற்றி எழுது.

12. (அ) மாறன் அகப்பொருள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சிதம்பரப்பாட்டியல் பற்றி சிறு குறிப்பு வரைக.

13. (அ) காக்கைப்பாடினியம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) யாப்பெருங்கலக்காரிகை விரித்தி பற்றிய செய்திகளை தருக.

14. (அ) இடைக்கால அணி இலக்கண நூல்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) அகராதி நிகண்டினை விளக்குக.

15. (அ) நன்னூல் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சூடாமணி நிகண்டினை பற்றி குறிப்பு வரைக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

16. இலக்கண விளக்கமும், இலக்கிய விளக்கமும் பற்றி கட்டுரை வடிவில் எழுதுக.

17. ஐந்து இலக்கண நூல்களை விவரிக்க.

18. அகப்பொருள் விளக்கம் பற்றி எடுத்துரைக்க.

19. நிகண்டுகளின் வகைகளைத் தருக.

20. புறப்பொருள் வெண்பாமாலை பற்றி விவரிக்க.

———————

| S–4836 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA4C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடை தருக.

1. சிங்கபுரத்தை ஆட்சி செய்த மன்னர்கள் யார்?

2. சிலப்பதிகார உரையாசிரியர்கள் நால்வர் பெயர்களைக் கூறுக.

3. மணிமேகலை – பெயர்க்காரணம் தருக.

4. கம்பர் எழுதிய பிற நூல்கள் இரண்டினைக் கூறுக.

5. இலக்கண நூலை வடநூலார் எவ்வாறு அழைப்பர்?

6. மணிமேகலையின் தோழி பெயர் என்ன?

7. பெரியபுராணத்தின் ஆசிரியர் பெயர் என்ன?

8. இளையான்குடி மாறநாயனாரின் பூசைநாள் எது?

9. தேம்பாவணி – பெயர்க்காரணம்.

10. சீறாப்புராணத்தின் ஆசிரியர் பெயர் என்ன?

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடைதருக.

11. (அ) சிலப்பதிகாரம் எழுந்த காரணம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் உரைத்த செய்தி யாது?

12. (அ) மணிமேகலை மணிபல்லவத் தீவிற்கு கொண்டு செல்லப்பட்ட விதத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) மணிமேகலைக்கு தீவதிலகை கூறிய அறச்செய்திகள் யாவை?

13. (அ) மிதிலை நகரில் கொடிகளின் தோற்றத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணம் குறிப்பு வரைக.

14. (அ) பெரியபுராணம் – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சிவபெருமான் மாறநாயனாரை நோக்கி கூறியனவற்றையும் காரணத்தையும் விளக்குக.

15. (அ) எருசலேம் நகரம் எவற்றோடெல்லாம் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது?

(அல்லது)

(ஆ) சீறாப்புராணம் பற்றிய செய்திகளைத் தருக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரைவடிவில் விடை தருக.

16. கட்டுரைக் காதையின் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. இராமன் வேள்விச் சாலையை அடைந்த நிகழ்வினை விவரி.

18. பாத்திரம் பெற்ற காதை சுட்டும் அறச்சிந்தனைகளைப் புலப்படுத்துக.

19. மாறநாயனாரின் சிவ தொண்டினை விளக்கி விவரி.

20. எருசலேம் நகரின் பெருமையினை தேம்பாவணி வழி கட்டுரைக்க.

---

| S–4837 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA4C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

தமிழ்

புறப்பொருள் வெண்பாமாலை

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. உண்டாட்டு – விளக்குக.

2. கையறுநிலை இடம் பெற்றுள்ள திணை எது?

3. பெருஞ்சோற்று நிலை என்றால் என்ன?

4. பூக்கோள் நிலை – விளக்குக.

5. மறனுடைப் பாசி – குறிப்பு வரைக.

6. கந்தழி என்றால் என்ன?

7. தும்பை வீரன் பகைவரைக் கொன்று குவித்தலுக்கு என்ன பெயர்?

8. மூதின் முல்லை – விளக்குக.

9. காயாம் பூவினைப் போற்றிக் கூறும் துறையின் பெயர் என்ன?

10. பாடாண் வேந்தனின் இல்லற மாண்புகளை எடுத்துக் கூறும் துறை பெயரைக் குறிப்பிடுக.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடைதருக.

11. (அ) பிள்ளை வழக்கு, கொற்றவை நிலை சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நெடுமொழி கூறல், மிகுகுடிநிலை – குறிப்பு வரைக.

12. (அ) பெருஞ்சோற்று நிலை, நல்லிசை வஞ்சி சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வஞ்சினக் காஞ்சி, பூக்கோள் நிலை சான்றுடன் விளக்குக.

13. (அ) எயில்தனை அழித்தல், அழிபடை தாங்கல் இவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கந்தழி, காந்தள் – குறிப்பு வரைக.

14. (அ) நூழில், நூழில் ஆட்டு – விளக்குக.

(அல்லது)

(ஆ) மூதின் முல்லை, ஏறாண் முல்லை இவற்றை சான்றுடன் விளக்குக.

15. (அ) பூவை நிலை, இயன்மொழி வாழ்த்து – குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கூத்தராற்றுப்படை, புலவராற்றுப்படை சான்றுடன் விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடைதருக.

16. கரந்தைத் திணை மற்றும் துறைகளை சான்றுடன் விளக்குக.

17. வஞ்சித் திணையில் இடம் பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

18. நொச்சிப் படலத் துறைகளை சான்றுடன் விளக்குக.

19. வாகைத் திணையில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

20. பாடாண் திணையில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படைத் துறைகளை சான்றுடன் விளக்குக.

---

| S–4838 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTAA4 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

தமிழ்

இயைபுப்பாடம் — பேச்சுக்கலை

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சொற்பொழிவுகள் எவை? எவை?

2. முகாம்களை நடத்துபவர்களை வரிசைப்படுத்துக.

3. நினைவாற்றலுக்கு எதனை இழுக்கென்று பேச்சாளர்கள் கருதக்கூடாது?

4. பேச்சாளர்கள் ஞானத்தைப் பெறச் செய்ய வேண்டியவை எவை?

5. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சொற்பொழிவாளர்கள் யார்?

6. பேச்சால் சுதந்திரப் போராட்டத்திற்கு முரசு கொட்டியவர் யார்?

7. பட்டிமன்றம் - விளக்கம் தருக.

8. கருத்தரங்கம் என்றால் என்ன?

9. உரைகளை வகைப்படுத்துக.

10. வரவேற்புரை என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சொற்பொழிவுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மேடைப் பேச்சிக்கு நாப்பழக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

12. (அ) தொடக்க நிலைப் பேச்சாளர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விழாப் பேச்சின் சிறப்புக்களை விளக்குக.

13. (அ) வானொலி பேச்சுத்திறன் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இதழ்களின் நேர்காணல் குறித்து எழுதுக.

14. (அ) வழக்காடு மன்றத்தைக் காட்சிப்படுத்தி எழுதுக.

(அல்லது)

(ஆ) கருத்தரங்க நிகழ்வுகள் பற்றி விவரிக்க.

15. (அ) சிறப்புரை என்றால் என்ன? அவை எவ்வாறு அமைதல் வேண்டும் விளக்குக.

(அல்லது)

(ஆ) வாழ்த்துரைக்கும வரவேற்புரைக்குமான வேறுபாட்டினை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. மேடைப் பேச்சிற்கு வள்ளுவர் தரும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

17. அரசியல் பேச்சுக்களில் கையாள வேண்டியவை குறித்து விவரிக்க.

18. தொலைக்காட்சிப் பேச்சுத் திறனின் இன்றியமையாமையை விளக்குக.

19. மேடை விவாதங்கள் குறித்து விவரிக்க.

20. முன்னோடிப் பேச்சாளர்களே பின்பு வரும் பேச்சாளர்களுக்குச் சான்று - நிறுவுக.

———————

| S–4839 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA5C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**அற இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளிக்க.

1. திருக்குறள் எவ்வாறு பகுக்கப்பட்டுள்ளது?

2. 'கேள்வி' அதிகாரத்தில் கூறப்படும் ஒருகுறள் எழுதுக.

3. நான்மணிக்கடிக்கையின் ஆசிரியர் யார்?

4. இன்னா நாற்பது நூல் எத்தனைப் பாடல்களை உள்ளடக்கியது?

5. 'சிலம்பிக்குத் தன்சினை கூற்றம்' என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

6. ஆசாரம் என்பதன் பொருள்?

7. திரிகடுகம் என்ற நூலை இயற்றியவர் யார்?

8. ஏலம் என்பதன் பொருள்?

9. நீதிநெறி விளக்கம் பாடியவர் யார்?

10. நீதிநூல் பயில் என்றவர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) திருக்குறள் குறிப்பு வரைக:

(அல்லது)

(ஆ) நாலடியார் கல்வி அதிகாரத்தில் கூறும் செய்திகள் யாது?

12. (அ) இன்னாநாற்பது ஆசிரியர் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) குழவி தளர் நடை காண்டல் இனிதே; இப்பாடலின் பொருளை விளக்குக.

13. (அ) பழமொழி நானூறு சிறுகுறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சிறுபஞ்சமூலம் சிறப்பு பாயிரம் விளக்குக.

14. (அ) கூடலூர்க்கிழாரின் சிறப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) "தாளாளன் என்பான் கடன் படா வாழ்பவன்" இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் குறிப்பு எழுதுக.

15. (அ) நீதிநெறி விளக்கம் சிறுகுறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) வேதநாயகப்பிள்ளை ஆசிரியர் குறிப்பு

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்றிற்கு** மட்டும் விரிவாக விடையளி.

16. புறங்கூறாமை பற்றி திருவள்ளுவர் வழி நின்று விளக்குக.

17. நான்மணிக்கடிகை நூற்குறிப்பு மற்றும் பாடல்களை எழுதி விளக்குக.

18. புற மற்றும் அகத்தூய்மை பற்றி முள்ளியார் கூறுவதை விளக்குக.

19. கூடலூர் கிழாரின் இல்லைப்பத்து குறித்து விளக்குக.

20. நல்வழி குறித்து அவ்வையார் கூறுவதை தொகுத்து எழுதுக.

————————

| S–4840 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA5C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

தமிழ்

இலக்கணம் – யாப்பு – யாப்பருங்கலக்காரிகை

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடை தருக.

1. யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர் யார்?
2. பாக்களின் ஓசை எத்தனை வகைப்படும்?
3. தளை என்றால் என்ன?
4. அடி எவ்வாறு அமையும்?
5. வெண்பாவின் பொது இலக்கணம் என்ன?
6. அளபெடை என்றால் என்ன?
7. ஈரசைச்சீர் என்றால் என்ன?
8. கலிப்பாவின் இனங்களை எழுதுக.
9. வனப்பு என்றால் என்ன?
10. வாழ்த்து எத்தனை வகைப்படும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உயிரளபெடை, ஒற்றளபெடை விளக்குக.

(அல்லது)

(ஆ) சீர்களின் வாய்ப்பாட்டை விளக்குக.

12. (அ) அடிகளை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொடை விகற்பங்கள் வகைப்படுத்துக.

13. (அ) ஆசிரியப்பாவின் இனங்களை சான்றுடன் விளக்கு.

(அல்லது)

(ஆ) பஃறொடை வெண்பாவின் அமைப்பை தருக.

14. (அ) கலிப்பாவின் இனங்கள் விளக்குக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பா, அதன் இனங்கள் குறித்து எழுதுக.

15. (அ) எழுத்துக்குப் புறனடை தருக.

(அல்லது)

(ஆ) எதுகைக்கும், மோனைக்கும் புறனடை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளி

16. சீர்களின் அடிப்படையில் அடிகள் எவ்வாறு அமையும்?

17. தளையின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

18. வெண்பாவின் வகைகளை விளக்குக.

19. ஆசிரியப்பாவின் வகைகள், ஓசைகளை எழுதுக.

20. யாப்பருங்காலக் காரிகையில் கூறப்பட்டுள்ள யாப்பிலக்கணத்தை சுருக்கி எழுதுக.

---

| S–4841 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA5C3 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**தமிழ் இலக்கிய வரலாறு**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடை தருக.

1. ‘திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை’ என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?

2. முதன்முதலில் சங்கங்களின் வரலாற்றை எடுத்துரைக்கின்ற நூல் எவை?

3. தமிழ்மொழியில் அமைந்த முதல் இலக்கண நூல் எவை?

4. சங்ககால புலவர்களைப் பற்றிக் கூறுக.

5. பல்லவ வம்சத்தை நிறுவியவர் யார்?

6. சோழர்களின் கொடி எது?

7. தமிழ்நாட்டு வாணிக பொருட்கள் எவை?

8. நாயக்கர் என்றால் என்ன?

9. ஐரோப்பியர் வருகை பற்றிக் கூறுக.

10. தற்காலம் என்றால் என்ன?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) தமிழ் செம்மொழி நூல்களை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிக்குடும்பம் பற்றி விளக்குக.

12. (அ) சங்ககால ஆதாரங்கள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்கமருவிய கால இலக்கியங்கள் எவை? விளக்குக.

13. (அ) சங்ககால பெண்பாற் புலவர்கள் பற்றி கூறுக.

(அல்லது)

(ஆ) பல்லவர் கால ஆட்சி முறைப் பற்றி கூறுக.

14. (அ) இராஜராஜ சோழனின் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர்களின் வரலாற்றை விளக்குக.

15. (அ) நாயக்கர் காலச் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்க்கால தமிழ் இலக்கியங்கள் பற்றி விளக்குக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

16. சங்க கால இலக்கியம் குறித்து கட்டுரைக்க.

17. தமிழ்ச்செம்மொழி நூல்களை வகைப்படுத்துக.

18. சோழப்பேரரசின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் குறித்து விளக்குக.

19. பல்லவர்கால தோற்றமும் வளர்ச்சியும் விளக்குக.

20. ஐரோப்பியரின் வரலாற்றுச் சிறப்புகளை விளக்குக.

———————

| S–4842 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA5C4 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**அறிவியல் தமிழ்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடை தருக.

1. அறிவியல் தமிழ் தந்தை யார்?

2. அறிவியல் தமிழ் என்றால் என்ன?

3. அறிவியல் கல்வி என்றால் என்ன?

4. தமிழில் வெளிவந்த முதல் அறிவியல் நூல் எது?

5. அறிவியல் தமிழ் ஆய்வு களஞ்சியம் எது?

6. இந்திய அறிவியல் கழகம் அமைந்துள்ள இடம் எது?

7. இதழ்களை எவ்வாறு வகைப்படுத்துவர்?

8. அறிவியலின் மொழிபெயர்ப்புகளின் வகைகள் எத்தனை?

9. அறிவியல் தமிழின் முக்கியத்துவம் யாவை?

10. அறிவியல் கலைச்சொல்லின் நெறிமுறைகள் என்னென்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) தமிழில் அறிவியல் அறிவை கண்டறிக.

(அல்லது)

(ஆ) தமிழ் பயிற்சி மொழித் திட்டம் பற்றி கூறுக.

12. (அ) தொடக்க கால அறிவியல் நூல்கள் யாவை?

(அல்லது)

(ஆ) முதல் கணித கால் குறித்து எழுதுக.

13. (அ) அறிவியல் தமிழின் நோக்கம் என்ன?

(அல்லது)

(ஆ) தமிழில் ஆய்வுப் பணிகள் பற்றி விளக்குக.

14. (அ) அறிவியல் தொழில் நுட்பம் பற்றி எழுது.

(அல்லது)

(ஆ) பேரிடர் மேலாண்மை சிந்தனைகள் குறித்து எழுதுக.

15. (அ) கல்வி வளர்ச்சியின் தொன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) அறிவியல் செயற்பாடுகளை குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.

16. அறிவியல் தமிழின் திட்டங்களும், வளர்ச்சியும் பற்றி கூறுக.

17. தேக்க நிலை குறித்து எழுதுக.

18. தமிழ் வளர்ச்சித் துறையின் நோக்கம் என்ன?

19. தமிழின் இளமையும் வளமையும் ஒப்பிடுக.

20. அறிவியல் மருத்துவ இதழ்கள் குறித்து உரைக்க.

---

| S–4843 |
|---|

| Sub. Code |
|---|
| 22BTA5C5 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

தமிழ்

நாட்டுப்புறவியல்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடை தருக.

1. நாட்டுப்புற பாடல்கள் இரண்டு கிளை கூறு.
2. தமிழ் கலைக்களஞ்சியத்தின் வகைகள் எத்தனை?
3. செந்தவர் இருந்தால் எவற்றிற்கு ஆகாது?
4. கண்ணேறு கழித்தல் என்றால் என்ன?
5. வினையின் இரண்டு வகைகள் யாவை?
6. நாட்டுப்புற வைத்தியத்தில் இருப்பது எது?
7. கல்வி திட்டங்களுக்கு நாட்டுப்புறவியலின் கூறுகள் என்ன?
8. நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் மூன்று பெரும்பிரிவு என்ன?
9. மிகையாற்றுல் கொள்கை என்பது என்ன?
10. பழங்குடி நாட்டுப்புறவியல் பற்றி அறிவன யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி

11. (அ) நாட்டுப்புற இயலின் வகைப்பாடு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) குழந்தைப்பாடல்கள் குறித்து எழுதுக.

12. (அ) கதைப்பாடலின் மரபுத் தன்மை யாவை?

(அல்லது)

(ஆ) கதைப்பாடல் வகைகள் குறித்து எழுதுக.

13. (அ) பழமொழியால் அறியலாகும் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) புராணக் கதைகள் குறித்து வரைக.

14. (அ) நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கம்பம் திருவிழா பற்றி விளக்குக.

15. (அ) தமிழக நாட்டுப்புற பாடல்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

(அல்லது)

(ஆ) புராணவியல் பற்றி குறிப்பு தருக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.

16. தொல்காப்பியரின் வாயிலாக நாட்டுப்புறவியலின் பாடல்களை எழுதுக.

17. கதைப்பாடல் காட்டும் பழக்கவழக்கம் குறித்து எழுதுக.

18. நம்பிக்கை வகைகள் சிலவற்றை கூறி விளக்குக.

19. இயற்கை நாட்டுப்புற மருந்தின் பயன்களை குறித்து எழுதுக.

20. நாட்டுப்புற இயகம் மொழியியகம் குறித்து விளக்கம் தருக.

———————